பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 90
பொருளியல்
திரு. கிருஷ்ணானந்தன்
செவ், வியா. 3.00 p.m.
கணக்கியல்
திரு. மரியதாஸ்
செவ், வியா. 4.00 p.m.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

A/L 90
வர்த்தகம்
திரு. தேவா
புதன், வெள்ளி 4.00 p.m.
இந்து நாகரிகம்
திரு. காரை
புதன், வெள்ளி 3.00 p.m
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி மீ 04 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 04 ( 19 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 125

## உலக நாடுகளில் ஆச்சரியம்! பரபரப்பு!!

# யுத்த நிறுத்தம் செய்ய ஈரான் இணங்கியது;

# 8 வருட வளைகுடா யுத்தத்துக்கு முடிவு வரும்

தெஹ்ரான், ஜூலை 19

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை ஏற்பதாக ஈரான் நேற்று அறிவித்தது.

ஈரானின் 'இர்னா' செய்தி ஸ்தாபனம் இத்தகவலை வெளியிட்டது.

ஈரானின் இந்த அறிவிப்பு, உலக வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க அளவு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக பி.பி.சி நேற்றுத் தெரிவித்தது.

கடந்த 8 ஆண்டுகளாக நடைபெறும் வளைகுடா யுத்தம் முடிவுக்கு வரும் வாய்ப்பு இதனால் உருவாகி உள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தம் செய்யும்படி ஈரானையும், ஈராக்கையும் ஐ. நா. பாதுகாப்புச்சபை தனது 598 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் ஓர் ஆண்டுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதை ஈராக் அப்போது ஏற்றுக்கொண்டது ஆனால் ஈரான் ஏற்றுக் கொள்ளவில்லை.

'ஈராக்கை ஆக்கிரமிப்பு நாடு என்று ஐ. நா. பிரகடனப்படுத்த வேண்டும்; அதற்காக ஈராக்கை பகிரங்கமாக கண்டிக்க வேண்டும்'' - ஐ. நா. கோரிக்கையை ஏற்பதற்கு ஈரான் முன்வைத்த நிபந்தனைகளை விதித்திருந்தது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் இல: 598 தீர்மானம் கூறுவதாவது:

★ வளைகுடாவில் இருந்து சகல படைகளையும் இரண்டு நாடுகளும் உடனே விலக்கிக் கொள்ள வேண்டும்.

★ சர்வதேச எல்லைக்கு படைகள் விலக்கப்பட வேண்டும்.

★ தரை, கடல், ஆகாயத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். (ஒ-எ)

## முல்லைத்தீவில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

முல்லைத்தீவு நகரப் பகுதியில் நேற்று இந்திய அமைதிப் படையினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆயிரக்கணக்கான படையினர் இவ்வாறு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதால் முல்லைத்தீவு நகரப் பகுதியில் சனசந்தடி பெரிதும் குறைந்திருந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-10)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு

# நிவாரணம் வழங்குவதில் புதிய கட்டுப்பாடுகள்

## ஐ. நா. செயலாளரிடம் அறிக்கை ஒப்படைப்பு

யுத்த நிறுத்தக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் ஈரானின் அறிக்கை நேற்று ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ்டி குயிலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பொதுச் செயலாளர் எடுத்து வரும் நடவடிக்கைகளை ஈரான் அந்த அறிக்கையில் பாராட்டியுள்ளது.

வளைகுடாவில் 290 பயணிகளுடன் சென்ற ஈரான் விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்திய சம்பவம் பற்றிய விசாரணையைத் தொடர்ந்து நடத்த ஐ. நா. பாதுகாப்புச்சபை நேற்று மீண்டும் கூடியது. அப்போதே ஈரானின் இந்த அறிவிப்பு வெளியானது. (ஒ-எ)

## புனர்வாழ்வு அமைச்சு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்திவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச நிவாரண உணவுப் பொருள் விநியோகத்தில் புதிதாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக புதிய கட்டுப்பாடுகளை விதிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. டி. ஜே. பண்டாரகொட பணிப்புரை விடுத்திருக்கிறார்.

ஏற்கனவே நிவாரண உணவு வழங்கப்பட்ட விதத்தில் தொடர்ந்து விநியோகிப்பதற்கு போதிய நிதி வசதி திறைசேரியிலிருந்து கிடைக்காது என்பதாலேயே புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படுகின்றன.

புதிய கட்டுப்பாடுகளினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரண உணவுப் பொருள் வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை அழைத்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் மாநாடு ஒன்றை அண்மையில் நடத்தினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தென் இலங்கையில் ஆயுதக் கிடங்குகளை தேடும் பணி தீவிரம்

கொழும்பு, ஜூலை 19

தென்இலங்கைத் தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்குகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பாதுகாப்புப் படைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற சில கொள்ளைச் சம்பவங்களினால் தென் இலங்கைத் தீவிரவாதிகளின் ஆயுதபலம் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது அரசுக்கு கவலையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மடுல்சிம பொலிஸ் நிலையத்தைத் தாக்கி 47 நவீன துப்பாக்கிகளை தீவிரவாதிகள் கொள்ளையடித்தனர் என்று தெரிவிக்கப் பட்டது.

கடந்த பன்னிரண்டு மாதங்களில் 150க்கும் மேற்பட்ட நவீன ஆயுதங்கள் தீவிரவாதிகளினால் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் அறிக்கைகள் தெரிவித்தன. (ஒ-எ)

## வடகொரியாவும் ஒலிம்பிக்கில்

சோல், ஜூலை 19

தென்கொரியத் தலைநகரான சோலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தென் கொரிய நாடா

(6-ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் ஜூலை 19

நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் எஸ். விமலேஸ்வரன் என அறியவந்தது. (ஒ-10)

## வவுனியாவுக்கு சமீபமாக

# குண்டு வெடித்து ரயில் பாதை சேதம்

வவுனியா, ஜூலை 19

வவுனியாவுக்கு வடக்குப் புறமாக சுமார் மூன்று மைல் தூரத்தில் கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் ரயில் பாதைபெருமளவில்சேதமுற்றது.

திங்களன்று இப்பகுதிக்கு விரைந்த இந்திய அமைதிப் படையினர் தேடுதலில் ஈடுபட்டார்கள். ரயில்வே பகுதியினரும் அவ்விடத்திற்கு விரைந்து சேத நிலைமைகளைப் பார்வையிட்டார்கள். (ஒ-164)

# 25 இல் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ரெலோ வேண்டுகோள்

வவுனியா ஜூலை 19

வெலிக்கடை சிறையில் 1983 ஆம் ஆண்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி உட்பட 53 பேரின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை நினைவு கூருமுகமாக எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு தமிழ் பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி ரெலோ இயக்கம் வேண்டுகோள் விடுத்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று இடம்பெற்ற தேடுதலும் ஷெல்லடியும்

சுழிபுரம், ஜூலை 19

சுழிபுரத்தை அண்டியுள்ள பகுதிகளான மூளாய், பண்ணாகம், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் நேற்றும், நேற்று முன்தினமும் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

நேற்று மாலையில் ஹெலிகொப்டர்களும் தாழப் பறந்து அப்பகுதிகளை நோட்டமிட்டன.

அதனால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

கடந்த சனிக்கிழமை சுழிபுரத்தில் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்தே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தேடுதல் நடவடிக்கையின் போது பலரும் தாக்குதலுக்குள்ளானதாக அறியப்படுகிறது.

நேற்று மாலையில் சுழிபுரப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. நேற்று இரவில் ஷெல் வடிச்சத்தம் யாழ்ப்பாண நகரம் வரை கேட்டது. (ஒ-க-28)

## சுழிபுரம் தாக்குதல் பற்றி இந்தியப் படை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை19

அகதிகள் பிரச்சினை பற்றிக் கேட்டறிந்து விட்டுத்திரும்பிய அமைதிப் படையினர் மீதே சுழிபுரத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தாக்குதல் குறித்து இந்திய அமைதிப்படை விடுத்த பத்திரிகை அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் விவரம் வருமாறு:

கடந்த 16ஆம் திகதி இரவு 8 மணிக்கு சுழிபுரத்தில் வைத்து ஆத்திரமூட்டப்படாமலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய அமைதிப்படையின் வாகனம் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

அண்மையில் தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகியவற்றுக்கு வந்து சேர்ந்த அகதிகளின் பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் கேட்டறிந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த அமைதிப்படை ஜவான்களை அந்தவாகனத்தில்இருந்தனர்..

தாக்குதல் சம்பவத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19 - 7 - 1988
ஆடி - 04
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-31 முதல் 12-01 வரை
ராகுகாலம்:
03-01 முதல் 04-31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



வளைகுடா யுத்தத்திலேயே ஒரு முடிவு வரப்போகுது; எங்கடை விஷயத்திலே எப்ப விடிவு வரப்போகுதோ....!!

# குறைந்த செலவில் வெப்பசக்தி மூலம் நீரிறைக்கும் இயந்திரம் கண்டுபிடிப்பு!

## ஆய்வு நிறுவன நிபுணர்கள் சாதனை!!

யாழ்ப்பாணம், ஜூலை19

வெப்ப சக்தியின்மூலம் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றின் மாதிரியை ஆய்வு நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இந்தப் புதிய கண்டுபிடிப்பின்மூலம் தமிழ்ப் பகுதிகளின் விவசாயத் துறையில் பெரும் திருப்பம் ஒன்று ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி இயந்திரம் சூரிய சக்தியில் இயங்கக் கூடியது. எனினும் சூரிய ஒளி இல்லாத சமயம் உமி, மரத்தூள் போன்றவற்றின் வெப்பத்தின் மூலமும் இது இயங்குகிறது.

சூரிய ஒளி இல்லாமல் இரண்டு மெழுகுதிரியின் ஒளியிலும் இது இயங்கியதை நேரில் காண முடிந்தது.

இதுபற்றி இந்த மாதிரியை வடிவமைத்த ஆய்வு நிறுவன ஆராய்ச்சிக்குழுவின் முக்கியஸ்தர் திரு. வி. துருவசங்கரியை வினவிய போது அவர் தெரிவித்ததாவது:

சுமார் மூன்று வருடங்களாக இதுபற்றி ஆராய்ச்சி செய்து வந்தோம் அதன் பலன் இன்று கிடைத்துள்ளது.

இந்த 'மாதிரி' இயந்திரமாக உருவமைக்கப்படும்பொழுது ஆழமற்ற கிணறுகளில் இருந்து நீர் இறைக்கவே இது பயன்படும்.

எனினும் நாம் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஆழமான கிணறுகளில் இருந்தும் நீர் இறைக்கும் வகையில் இதை அமைக்க முயல்வோம். ஆனால் இதற்கு பண உதவி தேவை.

இது பாவனைக்கு வரும் பட்சத்தில் விலை குறைந்ததாகவும், பராமரிப்புச் செலவுகள் மிகக் குறைந்ததாகவும் இருக்கும் - என்று தெரிவித்தார். (ஒ-க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

றி ெகான்டிசன் ஹொண்டா C50, C70, C90 MD70 Ricoor GS 125 எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ஸ்தூபி பெரிய மணி, குத்து விளக்கு மற்றும் கோவில் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. ஸம்ஸ், 26/3 மானிப்பாய் வீதி, இல 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4946)

பொமரேனியன் வெள்ளை நிறக்குட்டிகள் தடுப்பூசி போடப்பட்டு பூச்சிமருந்து கொடுக்கப்பட்டு உடன் விற்பனைக்கு உண்டு. நாராயண விறகு மரக்காலை ஆடிய பாதம் வீதி, கேணியடி வைரவர் கோவிலடி திருநெல்வேலி. (5069)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், Box Spring கட்டில், கட்டில் மெத்தைகள், Show Case அலுமாரி, மேசைகள் சிறிய பெரிய கபேட், கண்ணாடி மேசை, மகாராஜா ஹோல் செற், செற்றிகள் மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்.) (5093)

புதிய Reconditioned Honda C 70, C 50, CD 50 Chaly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. No 16 கண்டிரோட், யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) (5092)

### புரொயிலர் (Broiler) இறைச்சி விற்பனை

புரொயிலர் (Broiler) இறைச்சி எப்பொழுதும் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். R. S. K Farm முருகபதி உடுவில்; R. S. K. Farm தபால் கந்தோர் வீதி, மானிப்பாய். தொகையாக எடுப்போருக்கு சலுகை வழங்கப்படும். (4929)

### அடையாள அட்டை தவறிவிட்டது

K. கோபாலகிருஷ்ணன் புலோலி கிழக்கு, மாதனை, பருத்தித்துறை ஆகிய எனது அடையாள அட்டை இல. 392061487V யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் தனியார் பஸ்ஸில் 14-7-88இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது யாழ். உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5354)

ம. சுந்தரலிங்கம் விஷேட சேவை அலுவலர்-ரச்சேரி யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது மேற்கூறப்பட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். நன்றி (5355)

## தேவை

இளம் முட்டையிடும் பேட்டுக் கோழிகளும் கன்னிப் பேடுகளும் தொகையாக உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி No. 127, Kannathiddy Road, Jaffna. (4948)

### வேலைக்கு ஆள் தேவை

புத்தகக்கடையில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்கள் தேவை. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 284, C/o உதயன், யாழ்ப்பாணம். (5357)

### தனி அறை தேவை

யாழ்/நகர எல்லைக்குள் குடியிருப்புக்கு சகல வசதியும் கொண்ட தனிஅறை தேவை. Separate Entrance விரும்பத்தக்கது. தொடர்பு: 283, C/o உதயன். யாழ்ப்பாணம். (5356)

## குணமகன் தேவை

கனடாவில் நிரந்தர தொழில் புரியும் 31வயது நிரம்பிய ரோமன் கத்தோலிக்க வேளாள இனத்தைச் சேர்ந்த மணமகனுக்கு நன்கு படித்த பெண்ணும், அவரின் சகோதரியான 30 வயது நிரம்பிய ஆயுர்வேத டாக்டருக்கு கல்வித்தகைமையுடைய பட்டதாரி, கணக்காளர், பொறியியலாளர் எதிர்பார்க்கப் படுகிறது. தொடர்பு, 282, C/o, உதயன், யாழ்ப்பாணம் (5351)

### கைமாறிய சைக்கிள்

தெல்லிப்பளை புடைவைக் கடைக்கு முன்னால் விடப்பட்ட இல. 70 H 394 உடைய றஜ் சைக்கிள் கைமாறப்பட்டுள்ளது. அதே இடத்தில் இருந்த ரலி சைக்கிள் எம்மிடம் உள்ளது. அத்தாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். "சைலோ" ரெக்ஸ் தெல்லிப்பளை. (5353)

### திருத்த வேலைகள்

மின்சார உபகரணங்கள் திருத்திக் கொடுக்கப்படும் றேடியோ, ரீவி, டெக், குளிர்சாதனப்பெட்டி, வீட்டு மின்சார இணைப்புநீர்க்குழாய் பொருத்துதல், மோட்டார் றிவைன்டிங் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். (ஒளி அமைப்பாளர்) தொடர்பு: Nesta Electrical Works 59, Station Road, Jaffna. (5084)


எமது நேற்றைய

புதிய வெளியீடு!

✶ கார்த்திக் — ✶ சரண்யா

'என்ஜீவன்பாடுது'

(தரமான பிரதி)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(C/5892)



## தேவை

எமது ஸ்தாபனத்திற்குக் குறைந்தது இரண்டு வருட அனுபவம் உடைய இரண்டு Electricians (மின் தொழில்புரிபவர்கள்) தேவை.

**A. M. L.**
35, Bankshall Street,
Jaffna

என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும் (C 5801)



## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

சவூதி அரேபியா
**Saudi Catering Company**
யில் கீழ்க்காணும் வெற்றிடம் உண்டு.

| | | |
|---|---|---|
| WAITERS | - | 400 Ryal |
| COOKS | - | 400 Ryal |

3 வருட ஒப்பந்தம்.
அத்துடன் வெளிநாடு செல்ல விரும்புகிறவர்களின்
PASSPORT தேவைகளும்
(குறிப்பாக வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்)
என்னால் நாணயத்துடன் செய்து கொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்:
**க. தம்பிப்பிள்ளை**
(வைரவ கோவில் அருகாமை)
சித்தன்கேணி. (5334)



## BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு வகுப்பு
விஞ்ஞானம்
**A/L 90**

| | | |
|---|---|---|
| திரு. நல்லையா | — தூய/பிரயோககணிதம் | - 1-45 |
| திரு. தம்பிராஜா | — விலங்கியல் | - 1-45 |
| திரு. சத்தீஸ் | — இரசாயனவியல் | -12-00 |
| திரு. மணியம் | — பௌதிகவியல் | - 8-30 |
| பிரபல ஆசிரியர் | — தாவரவியல் | - 2-45 |

ஆரம்பம்: 23-07-88
சனி 8-30 a. m.

**பிரிவு II A/L 90**
திரு. மணியம் - பௌதிகவியல் -4-00p.m.

ஆரம்பம்: 23-07-88
4. 00 p. m.

(C-5802)


## 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கொட்டடி
**திரு. சினிவாசகம் நடராஜா**
(யாழ். மாநகர சபை ஊழியர்)

தோற்றம்: 27- 1- 1926 மறைவு: 18- 7- 1980

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி: மகேஸ்வரி
பிள்ளைகள்: லலிதா, கணேசராஜா(ஜேர்மனி) அனுசுயா
மருமகன்: ஆனந்தராஜா
பேத்தி: [illegible]
வடலியடைப்பு. (5099)

# தீவுப்பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் இல்லை

## விவசாயத் திணைக்களத்தின் முடிவால் பலர் ஏமாற்றம்

மானிப்பாய், ஜூலை 19

கடந்தகால அசம்பாவிதங்களால் பாதிப்படைந்த யாழ்ப்பாண மாவட்ட முழுநேர விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் விரைவில் வழங்கப்படவிருக்கும் நிவாரணப் பணம் வேலணை - புங்குடுதீவு விவசாய சேவைப் பகுதிகளான தீவுப்பகுதி விவசாயிகளுக்குக் கிடைக்க மாட்டாது,

யாழ் மாவட்ட விவசாயத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களைப் போன்றே தீவுப்பகுதி விவசாயிகளும் கடந்த கால அசம்பாவிதங்களின்போது பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நிவாரணப்பணம் வழங்கப்படக் கூடாது என்ற விவசாயத் திணைக்களத்தின முடிவு தீவுப்பகுதி விவசாயிகளுக்குக் கவலையையும், பெரிய ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.

கமத்தொழில் சேவை நிலையங்களூடாக தமக்கும் இந்த நிவாரணப் பணம் வழங்கப்பட வேண்டும் என வேலணை, புங்குடுதீவு விவசாயிகள் விவசாயத் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக அறியப்படுகின்றது. (இ-90)

# பகுதி பகுதியாகவே பொதுத் தேர்தல் நடத்தப்படலாம்

கொழும்பு, ஜூலை 19

பகுதி பகுதியாக பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் திட்டம் ஒன்றை செயற்படுத்தும் சாத்தியம் பற்றி அரசு பரிசிலனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் ஸ்திரமின்மை நிலவுவதால் ஒரே நாளில் பொதுத்தேர்தலை நடத்தும் சாத்தியக்கூறு இல்லை என்று அரசு வட்டாரங்களில் தெரிவிக்கப் படுகிறது.

பகுதி, பகுதியாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டியதில்லை என்று அமைச்சர் நிசங்க விஜேரத்ன தெரிவித்தார்.

ஒரேநாளில் தேர்தலை நடத்த முடியாதநிலை ஏற்படும் இடத்து, பகுதி பகுதியாக நாட்டில் பொதுத்தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளரை நிர்ப்பந்திக்கும் நிலை ஏற்படலாம்.

ஒருநாளில் பொதுத் தேர்தலை நடத்த பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்பட்டால் பகுதி பகுதியாகத் தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி— இப்படி அமைச்சர் நிசங்க விஜேரத்தின தெரிவித்தார். (இ-எ)

### சேதமுற்ற வீடுகளைத் திருத்த

# தமிழ் ஊழியர்களுக்கு கடன் உதவி கிடையாது

## நலன்புரிச் சங்கம் கைவிரிப்பு

ஊர்காவற்றுறை ஜூலை 19

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற தமது வீடுகளை திருத்துவதற்குக் கடன் உதவி வழங்குமாறு அகில இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்கள் நலன் புரிச்சங்கத்திற்கு வடபகுதி அரச உத்தியோகத்தர்கள் சிலர் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் எவருக்கும் இக் கடன் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இது பற்றி அறியவருவதாவது:-

அகில இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இயங்கி வருகிறது.

தனது அங்கத்தவர்களுக்கு வீடு கட்டவும் வீடுகளைத் திருத்தவும் கடனுதவி வழங்கிவரும் இச்சங்கம் தற்போது வடக்கு கிழக்கு ஊழியர்களுக்கு இவ்வுதவியை வழங்காமல் கையை விரித்துள்ளதாம்.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த தமது வீடுகளைத் திருத்த கடன் கோரி விண்ணப்பித்த தமிழ் ஊழியர்கள் இது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர். [உ-16]


## ஆண்டு 5

புலமைப்பரிசில் பரீட்சை
பயிற்சி வகுப்பு
ஆரம்பம்:
20 - 07 - 88
நேரம்:
5 p.m - 6 p.m
விபரங்கட்கு-
98, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(5096)



## Royal Institute.

மானிப்பாய்
மகளிர் கல்லூரி முன்பு

O/L 1988 Dec.
DAY CLASSES
ஆரம்பம்: 20-07-88, 8.30 a.m.

வடமாகாணத்தில் கடந்த பதினைந்து வருடங்களாகச் சாதனை படைக்கும் ஆசிரியர் குழு:

திரு. இரா. செல்வவடிவேல்,
K. S. முத்துலிங்கம், தயாபரன்,
தெய்வர், பொன். செல்வராசா.
(5336)


# நாவற்குழி முகாம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 19

நாவற்குழியில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் முகாம் அகற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் அமைக்கப்பட்ட இந்த முகாம் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின் இந்திய இராணுவ முகாமாக மாற்றப்பட்டது.

எனினும் கடந்த வாரம் இந்த முகாமில் இருந்த படையினர் வாபஸ் பெறப்பட்டு முகாமும் மூடப்பட்டுள்ளது. (இ-10)


THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

## O/L88

DAY CLASS
காலை 8-00
பி-ப 1-00

### 4 மாத தீவிர பயிற்சி வகுப்பு

பிரிவு I ஆரம்பமாகியுள்ளது.

வருடம் தோறும் சிறந்த பெறுபேறுகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவுடன் மேலும் சில விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(C-5896)

உயிரியல் பிரிவுக்கென
தனித்துவம் பெற்ற இரு ஆசிரியர்களும்
யாழ் நகரில் ஒருமித்த சேவையாற்றும்
ஒரே ஒரு நிறுவனம்:

## A/L 90

விலங்கியல்: திரு. தம்பிராஜா
(சனி, ஞாயிறு, 2 00 p. m.)
தாவரவியல்: திரு. பாலா
(சனி, ஞாயிறு, 1-00 p. m.)
(C-5895)



THE EXPRESS INSTITUTE KOPAY

## A/L 90

இரசாயனவியல்
பௌதிகவியல்

20-07இல் ஆரம்பம்

புதன், வெள்ளி வகுப்புகள்:
3-00 p.m. — PHYSICS
BY திரு. சோதிலிங்கம்
4-00 p.m. — CHEMISTRY
BY திரு. மதுரமணி

விசேட இரசாயனவியல் வகுப்பு
By திரு. சண்முகசுந்தரம்
25-07 (திங்கள்) ஆரம்பம்.

(C 5897)

## A/L 90

பொருளியல்/கணக்கியல்
வகுப்புகள்

செவ்வாய், வியாழன் நாட்களில்:
3-00 p.m. — பொருளியல்
BY திரு. கிருஷ்ணனந்தன்
4-00 p. m. — கணக்கியல்
BY திரு. மரியதாஸ்

[C 5898]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரில்

# செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரணம்; அரச அதிபர் மூலமே விண்ணப்பிக்கலாம்

## யாழ் கிளை மூலம் வழங்கும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், ஜூலை 19

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் செஞ்சிலுவைச் சங்க நிவாரணத்தைப் பெறுவதற்கு தத்தம்பகுதி அரசாங்க அதிபர்கள் மூலமே விண்ணப்பிக்கவேண்டும்.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இந்த உதவியை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை எடுத்த முயற்சியை கொழும்பிலுள்ள தலைமையகம் நிராகரித்துவிட்டது.

மேற்படி மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை செஞ்சிலுவைச்சங்கத்தின் நிவாரண உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் தமக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுத் தருமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியிருந்தனர்.

இதனையடுத்து பிரஸ்தாப பகுதிகளில் உபகுழுக்களை அமைத்து, அவற்றினூடாக நிவாரணம் வழங்க முடியும் என்று ஆலோசனை தெரிவித்தும், அதற்கு அனுமதி கோரியும் யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் தலைமையகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்திற்குக் கொழும்பு தலைமையகத்தில் இருந்து அதன் தலைவர் திரு. ஈ. ஜி. குணவர்த்தன பதில் அனுப்பியிருக்கிறார்.

இக்கடிதத்தில் உபகுழுக்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லையெனவும் —

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமக்கு நிவாரணம் தேவையானால், அரச அதிபரினூடாக விண்ணப்பிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்பகுதிகளில் அரச அதிபர் பணிமனைகள் ஒழுங்காக இயங்குவதில்லை.

இந்த நிலையில் எவ்வாறு நிவாரணத்திற்கு விண்ணப்பிப்பது என்று தெரியாமல் இப்பகுதியில் பாதிக்கப்பட்டோர் குழம்பிப்போய் இருக்கின்றனர். [உ-5]

### சடலமாக ஒப்படைப்பு

மட்டக்களப்பு ஜூலை 19

படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாலிபர் ஒருவர் ஒருவாரத்தின் பின்பு சடலமாக உறவினர்களிடம் கையளிக்கப்பட்டார்.

ஆரையம்பதி வாசியான நல்லையா ஸ்ரீபாலா (19 வயது) என்ற வாலிபரே இறந்தவர் ஆவார்.

தப்பி ஓட முயன்ற சமயம் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [இ-21]

சுகாதாரத் திணைக்கள

## தொழில்நுட்பச் சேவை 12 வகை ஊழியர்களின் திருத்தப்பட்ட சம்பள விபரம்

மட்டக்களப்பு, ஜூலை 19

1988ஆம் ஆண்டு ஜனவரி முதல் அரசஊழியர்களுக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்ட சில திருத்தங்களின் பிரகாரம் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள இடைமட்ட தொழில்நுட்ப சேவையிலுள்ள 12 வகை ஊழியர்களின் சம்பளத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது.

1-1-88இல் அமுல் செய்யப்பட்ட சம்பளத் திட்டம் ரத்துச்செய்யப்பட்டு அதே திகதியில் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை தெரிவித்துள்ளது.

வைத்திய ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், றேடியோகிருபர், ஒக்கியுபேஷனல் சிகிச்சையாளர்கள், பௌதிக சிகிச்சையாளர், பற்சிகிச்சையாளர், பல்கட்டுநர், பொதுசுகாதார பரிசோதகர், பூச்சியியல் உதவியாளர் உணவு / மருந்து பரிசோதகர், கட்டட பரிசோதகர் (மலசலகூடம்), பிரதம தொற்றுநோய்த் தடை பரிசோதகர் ஆகியோர்தான் பிரஸ்தாப உத்தியோகத்தர்களாவர்,

மேற்படி திருத்தங்களின் பிரகாரம் தற்போது நடைமுறையிலுள்ள தரம்-I, தரம்-II அ, தரம் - II ஆ, தரம் III ஆகியவற்றில் தரம் III தற்போது நீக்கப்பட்டுள்ளது. அத்தரத்திலுள்ளவர்கள் தரம் - II (ஆ) ஆக மாற்றப்பட்டுள்ளார்கள்.

ஏனைய தரங்களிலுள்ளவர்கள் தொடர்ந்து அதே தரங்களில் அடங்குவர். நியமனம் பதவி உயர்வு மாற்றி அமைக்கப்பட்டுள்ள சேவைகளுக்கேற்ப திருத்தங்களுடன் பின்பு அறிவிக்கப்படும்.

திருத்தம்

தரம் - I

ரூ. 31,200 — 8×900 —10 × 1200 — 50,400

தரம் - II அ

ரூ 27,000—4×600— 14 × 900— 42,000

தரம் - III ஆ

ரூ. 21,000—5×480— 11×600—30,600

மேற்படி திட்டத்தில் நுண்கருவி பரிசோதகர், மருந்து கலவையாளர் ஆகியோர் அடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-21)


## பதவி வெற்றிடம்

முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான்.

### கணக்குப் பதிவாளர்

மேற்காணும் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறியீட்டு இல-301/11

வயது:- 23 — 45

வேதனம்:- 300 — 540 / 15x12 — 20x3

(கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்)

ரொக்கப்பிணை:-
அடிப்படைச் சம்பளத்தின் 5 மடங்கு

கல்வித்தகைமை:-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பகுதியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அநுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 3ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பதவியில், நான்கு வருடத்திற்குக் குறையாத அநுபவம்.

அல்லது

ஆ. க. பொ. த. சாதாரணதரம் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், தமிழ்ப்பாஷை என்பவற்றில் திறமைச் சித்தி உள்ளடக்கியதாக ஆறுபாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய அநுபவம் க. பொ. த. உயர்தரம் வர்த்தகப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 10-8-88க்கு முன் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான்.' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ, நேரிலோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

தலைவர்,
மு: ஐ. க. ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்,

[சி-5787]


### பணிமனை இடம் மாறுகிறது

குருநகர், ஜூலை 19

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் புதிய இடத்தில் செயல்பட உள்ளது.

இம்மாதப் பிற்பகுதியில் கச்சேரி இயங்கத் தொடங்கியதும் கல்வியங்காடு, ஆடியபாதம் வீதிக்கு இந்தப் பணிமனை மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## பாடம் பயில்வோம்

### தமிழ்மொழி - விடைகள்

16-7-88 சஞ்சிவியில் பிரசுரமான ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இல: 3 க்கான விடைகள் இங்கு பிரசுரமாகின்றன.

தமிழ் விடைத்தாள் இல: 3
விடைகள்

(1) i. தொழில்நுட்பக் iv. நங்கூரம்
ii. நன்னூல் v. பிரார்த்தனையில்
iii. மகோற்சவம்

(2) i. பாணம், கணை iv. அசுவம், புரவி
ii. அமர், சமர் v. தீர்த்தம், புனல்
iii. உழவர், மேழியர்

(3) i. வாட்டம் iv. அதமம்
ii. விருத்தர் v. ஞாபகம்
iii. வன்பு

(4) i. கிளி பாலும் பழமும் உண்டது.
ii. அவன் தண்ணீரை மட மட என்று குடித்தான்.
iii. அந்தக் கிராம மக்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல வாழ்கின்றனர்.
iv. மதி:- (பெ): முழு மதியைக் கண்டு குழந்தை மகிழ்ந்தது.
மதி:- (வி) நாம் பெரியோர் சொல் வார்த்தைகளை மதித்து நடத்தல் வேண்டும்.
v. வீடு:- (எழு): எமது அடிப்படைத் தேவைகளில் வீடும் ஒன்றாகும்.
வீடு:- (செயப்படுபொரு): அவன் வீட்டைக் கட்டினான்

(5) i. ஒரு காட்டில் iv. 247
ii. செயப்பாட்டுவினை v. பண்டிதை
iii. பிணை

(6) மலையும்மலைசார்ந்த இடமும் - குறிஞ்சி
புருடனை இழந்த பெண் – விதவை
புல்லியர் - கீழ்மக்கள்
ஆசை வெட்கமறியாது – முதுமொழி
திருக்குறள் - திருவள்ளுவர்
கண்டதுண்டம் – சின்னபின்னம்
பொதுப்பால் - நோயாளி
வண்டு - முரலும்

(7) i. கை, வா iv. தீ
ii. பூ, பேர் v. பா
iii. நா

(8) மழை பெய்யும் போது சிறுவன் ஓடியதால் வழுக்கி விழுந்தான்.

(9) i. முள் + செடி v. பூவிதழ்
ii. தேன் + குழல் vi. கல்லெறிந்தான்
iii. மூன்று + ஆயிரம் vii. விண்ணோடு
iv. செலவு + இல்லை viii. அறவினை

(10) i. சுடுகாடுமட்டும் iv. விடிந்தால்போச்சு
ii. முளையிலே தெரியும் v: பயமறியாது
iii. பால் குடிக்கும்

பருத்தித்துறையில் நடந்தஅசம்பாவிதம்

## இந்தியப்படை அதிகாரி வருத்தம் தெரிவித்தார்

வடமராட்சி ஜூலை 19

ஜூன் முதலாம் திகதி பருத்தித்துறையில் நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது அமைதிப் படையினரின் நடவடிக்கையினால் மக்கள் பாதிக்கப்பட்டது குறித்து அமைதிப்படை அதிகாரி பருத்தித்துறைப் பிரசைகள் குழுவிடம் வருத்தம் தெரிவித்தார்.

மேற்படி சம்பவத்தின் போது பாதிப்புற்ற மக்களின்சார்பில் கையொப்பமிட்ட மனு ஒன்றை முன்னாள் பருத்தித்துறைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ். தேவதாசன் யாக்கலைப் பகுதியில் உள்ள அமைதிப்படை உயரதிகாரி ஒருவரிடம் கையளித்தார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு வருத்தம் தெரிவித்தார்.

இனிமேல் இப்படி [illegible] துக்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மக்களிடம் தமது வருத்தத்தைத் தெரிவிக்கும்படியும் அவர் கூறியதாக திரு. தேவதாசன் சொன்னார். (உ 160)

### சனசமூக சமாஜம் கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 19

யாழ் போதனாசாலை கழிவுநீர் பண்ணைக் கடலில் கலப்பது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று யாழ் மாவட்ட சனசமூக சமாஜம் யாழ் சுகாதார வைத்தியப் பிரிவைக் கோரியுள்ளது. (இ-160)

வெலிக்கடைப் படுகொலைகள்:

## 25 ஆம் திகதி துக்க தினம்; கம்யூ. கட்சி வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், ஜூலை19

1983 ஜூலையில்இடம் பெற்ற தமிழ்பேசும் மக்கள் மீதான கொடிய இனவாத வன்செயல்களின் — வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகளின் ஐந்தாவது வருட துயர நினைவை எதிர்வரும் 25.7.88 இல் துக்கதினமாகக் கொள்ளும்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொது வேண்டுகோள் விடுக்கின்றது.

இது தொடர்பாக அக்கட்சி விடுத்த அறிக்கையில் —

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகக் காலத்திற்குக்காலம் இனவாத வன்செயல்கள் இடம் பெற்றுவந்துள்ள போதிலும் 1983 ஜூலையில் ஆளும் பேரினவாத வெறிகொண்ட யூ.என். பி. அரசு திட்டமிட்டே கட்டவிழ்த்துவிட்ட இனவாத வன்செயல்களே மிகக் கொடூரமானதும் மோசமான அழிவுகளைத் தமிழ்மக்களுக்கு ஏற்படுத்தியதுமாகும்.

உயிர் இழப்புகளும் சொத்துக்கள் சூறையாடி — அழிக்கப்பட்டும், தென்னிலங்கையில் இருந்து லட்சக்கணக்கில் அகதிகளாகியும் தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டனர்.

அவமானம்மிக்க வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஐம்பத்திரண்டு தமிழ் அரசியற் கைதிகள் அடித்தும், குத்தியும் வெட்டியும் அநாகரிகமாகக் கொல்லப்பட்டனர். உலகப் பாசிச வெறியர்கள் கூடச் செய்வதற்குப் பின்நிற்கும் அச்சிறைப் படுகொலைகளைப் பற்றி இன்றுவரை ஜனநாயகம், சுதந்திரம், தருமம் பற்றிப் பேசிவரும் யூ. என். பி. பேரினவாத அரசு ஒரு சிறு விசாரணையைக்கூட நடத்தவில்லை.

இன்றைய துன்பம் நிறைந்த அன்றாட நிகழ்வுகளுக்கு வழிவகுத்துச் சென்ற அந்தத் துயரமும் கொடூரமும் நிறைந்த நாட்களைத் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டும் என இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள் விடுக்கின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இந்த அறிக்கையின் சுருக்கம் 17 ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே,) (ஓ)

### பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம்

கோப்பாய் ஜூலை 19

கடந்த வருட அசம்பாவிதங்களின் போது பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் தம்மால் வழங்கப்பட்டு வருவதாகவும், அதை விரைவில் பெற்றுக் கொள்ளும்படியும்வரணி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (சி -72))

## விதவைகள் ஆக்கப்பட்ட மூதூர் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பு

### கனேடிய அரசு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை19

வன்செயல்களின் போது விதவைகளான மூதூர்பகுதி பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்காக கனேடிய அரசாங்கம் இரண்டரை லட்சம் ரூபா வழங்குகிறது.

இதன் முதற்கட்ட[illegible] 25 [illegible] வழங்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மூலம் இந்த உதவி வழங்கப்படுகிறது.

கிடைத்துள்ள பணத்தைக் கொண்டு 25 விதவையருக்கு கோழிப் பண்ணை ஆரம்பிப்பதற்காகத் தலா ஐயாயிரம் ரூபா வழங்க உள்ளதாக இந்து இளைஞர் பேரவை செயலர் திரு. செ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார் (உ-க


# NEW Master INSTITUTE

B. M. C. Lane, JAFFNA. 241, Navalar Road, JAFFNA.

## A/L 90

பிரிவு:- II

ஆரம்பம்: 24-07-88 9. 30 மணி

| | |
|---|---|
| Zoology | - 9-30 - 10-30 |
| Botany | - 10-30 - 11-30 |
| Chemistry | - 11-30 - 12-30 |
| Physics | - 12-30 - 1-30 |
| Pure / Applied Maths | - 9-30 - 11-30 |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

★ பிரிவு Iக்குரிய அனுமதிகள் கண்டிப்பாக நிறுத்தப்பட்டுள்ளன.

★ ஒவ்வொரு பிரிவுக்கும் 300 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

(C-5875)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1. Saudi Arabia: சவூதி அரேபியா:

### Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15. Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

WITH FOOD ALLOWANCE

Age - 21 - 49 years

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

## 2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL.

(C 5869)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பரந்தன் தொழிற்சாலையை மூடுவது
# வடக்கின் பொருளாதாரத்தை பாதிக்கும் நடவடிக்கை
## ஊழியர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடி, அதற்குப்பதிலாக தெற்கில் வேறு இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை புதிதாக அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இத்தகைய நடவடிக்கை வடக்கின் பொருளாதாரத் தொழிற்பாட்டை புனரமைப்புச் செய்யும் முயற்சியைப் பாதிக்கும்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சார்பில் கருத்துவெளியிட்ட அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக இலங்கை வர்த்தக கைத்தொழில்பொதுத்தொழிலாளர் சங்கம் (சி. எம். யூ.) போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது.

மேற்படி சங்கம் இது தொடர்பாக கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கும் தேசிய புனர் நிர்மாண நடவடிக்கைக்குழுத் தலைவர், தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் கண்டன அறிக்கைகளை அனுப்பியிருக்கிறது.

பரந்தன் தொழிற்சாலையை இடம்மாற்றுவதால் வடக்கின் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் முயற்சி பாதிக்கப்படும்.

இத்தொழிற்சாலையில் பணியாற்றிய சுமார் 475 ஊழியர்களின் அமைதியான வாழ்வு பாதிக்கப்படும்.

மேலும் செயற்படக்கூடிய நிலையில் இருக்கும் ஒரு தொழிற்சாலையை மூடி, அதற்குப் பதிலாக பெரும்செலவில் புதிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பது பொதுநிதியைத் துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கையாகும்.

உலக வங்கியின் உதவியுடன் வடமாகாணத்தை புனரமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் உலக வங்கியைத் தவறாக வழிநடத்தி வடக்கிற்கு வெளியே புதிய இரசாயனத் தொழிற்சாலையை அமைக்க முயற்சி செய்கிறது.

—இப்படி சம்பந்தப்பட்ட அதிகாரி அரசாங்கம் மீது குற்றம் சுமத்தினார். (உ)


கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?
FREE 8"X10" ENLARGEMENT
பிரதி 4-00
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்



பிரயாண ஒழுங்குகள்

குவைத், சவூதி அரேபியா, பஹாரின்
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுடன் துரிதகதியில் பிரயாணம் செய்ய
இன்றே நாடுங்கள்

கோல்டன் ரவல்ஸை

* ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்
* எயர்போட் கிளினேர்ஸ்
* பாடசாலை கிளினேர்ஸ்
* HOUSE MAID

மற்றும் பலதரப்பட்ட வேலைகள் எம்மிடம் உண்டு.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயம் தினசரி காலை 8.30 முதல் மாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.

உங்கள் தேவையே
எங்கள் சேவை

தலைமைக் காரியாலயம்:
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

கிளை 2. கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

(C 5871)


### இராமநாதன் வித்தியாலயம் முதலிடம்

கொடிகாமம் ஜூலை 9
அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற கத்தோலிக்க சமய பரீட்சையில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் முதலிடத்தையும் மிருசுவில் சென் நீக்கிலஸ் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் தட்டிக் கொண்டன.

இப்பரீட்சை கொழும்பில் சமீபத்தில் நடைபெற்றது.

இவர்களுக்குரிய சான்றிதழ்கள் மிருசுவில் தேவாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன (இ-75)

### கிராம சேவையாளர் நேர்முகப் பரீட்சை

திருகோணமலை மாவட்டத்தினுள் கிராம சேவையாளர் தரம் இரண்டுக்கான நேர்முகப் பரீட்சை இன்று 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் காலை 9 மணிக்கு இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும். (இ-10)

### 25க்கு முன் விண்ணப்பம் அனுப்ப வேண்டும்

கொடிகாமம் ஜூலை 19
பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்,

சாவகச்சேரி கமநல சேவை நிலையம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் தமது பகுதி பயிர்ச்செய்கைஉத்தியோகத்தர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க - 15)

# கல்வி மந்திரிக்கு ஆசிரியர் சங்கம் மகஜர்
### மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை மாணவர் இன்னல் குறித்து

யாழ்ப்பாணம், ஜூலை 19
மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் மாணவர்களின் இன்னல்களைத் தீர்த்து வைக்கும்படி சென்றவாரம் மட்டக்களப்புக்கு நேரில்சென்று நிலைமைகளை அவதானித்த தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக்குழு மகஜர் ஒன்றினூடாக கல்வி மந்திரிக்கு சிபார்சு செய்துள்ளது

பிரஸ்தாப சங்கத் தலைவர் திரு. கா. சோமசுந்தரம், பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராசா அடங்கிய இத் தூதுக்குழு கல்விஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு விரிவான மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ 60சதவீதத்துக்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்குரிய மிகக் குறைந்த சம்பளமான 1440 ரூபாவுக்குப் பதிலாக 625 ரூபாவே வழங்கப்படுகிறது.

★ விஞ்ஞானப் பயிற்சியை மேற்கொண்டு வரும் ஆசிரிய மாணவர்களுக்கு இரசாயனவியல் ஆகிய பாடங்கள் போதிக்கப் படுவதில்லை. இதற்காக நிரந்தர விரிவுரையாளர்களையோ அன்றிப் பகுதிநேரவிரிவுரையாளரையோ நியமிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை.

★ கலாசாலைக் கட்டடங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

★ கலாசாலை அதிபர், ஆசிரிய கலாசாலைகள் பிரிவுப் பணிப்பாளரிடம் முன்பு முறைப்பாடு செய்திருந்தும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, (இ-6)

# பாடசாலைகளில் சமய வாரம் நடத்துமாறு
### அமைச்சுச்செயலாளர் பணிப்பு

மானிப்பாய், ஜூலை 19
ஒவ்வொரு பாடசாலையிலும் சமய வாரத்தை நடத்துமாறு கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. ஜே. ரி. டி. தும்புக்கொல அறிவித்துள்ளது.

சில பாடசாலைகள் சென்ற வருடம் சமய வார செயற்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் இருந்தன.

எனவே, இவ்வருடம் அதனைப் பூரணமாக செயற்படுத்துவதற்கு விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் பொருட்டு சென்றவருட செயற்திட்டத்தையே பாடசாலைகளின் வசதிக்கேற்ப பொருத்தமான திருத்தங்களைச் செய்து செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மேலதிக செயலாளர் திரு. தும்புக்கொல அறிவித்துள்ளார்.

சமய வாரத்தை பாடசாலைகள் தம் வசதிக்கேற்ப ஜூலை மாதம் முடிவதற்குள் நடாத்தி முடிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். [இ-90]

# 'வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நல்ல நெறிகளை புராணம் எமக்கு எடுத்துக் கூறுகிறது'

மானிப்பாய் ஜூலை, 19
புராணங்கள் சமய உண்மைகளை எளிமையாக விளக்க வல்ல கதைகளாக அமைந்துள்ளன. புராணங்கள் புராதனமான செய்திகள் மட்டுமல்ல. அவை வாழ்க்கையிலே கடைப்பிடிக்கக்கூடிய நல்ல நெறிகளை எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

மல்வத்தை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலயத்தில் பதின் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக சமய சொற்பொழிவாற்றிய சிவஞான துரந்தரர் திரு. சின். ஸ்ரீ தயாளனுக்கு ''செஞ்சொற் கொண்டல்'' என்ற பட்டம் வழங்கி உரையாற்றிய பண்டிதர் நா. இராசையா மேற்கண்டவாறு கூறினார்–

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்வைபவத்துக்கு இந்து மகா சபைத் தலைவர் திரு. த. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

லங்கம் லிமிட்டட்டைச் சேர்ந்த திரு. ந. சண்முகரத்தினம் திரு. ஸ்ரீ தயாளனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு பூ. வேலுப்பிள்ளையினால் பொற்கிளி ஒன்றும் பிரசாரகருக்கு வழங்கப்பட்டது.

வண்ணைக் கவிஞர் திரு. எஸ். சே. யோ, திரு. சுப்பிரமணியம் திரு. தியாகராசா திரு. செல்லத்துரை ஆகியோர் உட்பட பலரும் திரு. எஸ். ஸ்ரீ தயாளனின் சொற்பொழிவைப் பாராட்டி உரையாற்றினர். (இ-90)

# நிவாரணப் பணியால் மக்களுக்கு நன்மை

சர்வோதய யாழ்ப்பாணக் கிளையின் சேவை மிகவும் போற்றத்தக்க ஒன்றாக இன்றைய சூழ்நிலையில் அமைந்துள்ளது. அவர்கள் செய்யும் நிவாரண பணியால் பல மக்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

வலிகாமம் மேற்கு சனசமூக நிலைய சமாசத் தலைவர் திரு. வி. என். இராசரத்தினம் இவ்வாறு கூறினார்.

அண்மையில் யாழ். சர்வோதயத்தினர் வட்டுக்கிழக்கு அறிவொளி சன சமூக நிலையத்தில் நிவாரண உணவு விநியோக வைபவத்தின் போது தலைமை வகித்து அவர் உரையாற்றினார்.

சர்வோதயப்பிரதிநிதி திரு. கோ. சிறிஸ்கந்தராசா பேசுகையில் சர்வோதயம் ஆறு அம்ச திட்டத்தின் கீழ் இயங்குவதாகவும் அத்திட்டத்தின் அடிப்படையிலேயே செயலாற்றி வருவதாகவும் யாழ். சர்வோதயம் நிவாரண பணிக்கென ரூபா 1½ கோடி ஒதுக்கி உள்ளதாகவும் கூறினார்.

இக் கூட்டத்தில் வட்டு கிழக்கு கிராம சேவையாளர் திரு. ஆ. முருகேசு, சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

அறிவொளி சனசமூக நிலைய தலைவர் திரு. சிவலிங்கம் நன்றிகூறினார்.

# ஒய்வூதியர்களுக்கும் வாழ்க்கைப்படி வேண்டும்
### வடமராட்சி ஒய்வூதியர் கோரிக்கை

அரச ஊழியருக்குக் கொடுப்பது போன்று, ஓய்வூதியம் பெறுவோருக்கும் வாழ்க்கைப்படி வழங்கவேண்டும்.

வடமராட்சி அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் பொது நிர்வாக அமைச்சுடனும் ஓய்வூதியப் பணிப்பாளருடனும் தொடர்பு கொண்டு இந்த விடயத்தை வலியுறுத்துவது என முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் நிர்வாக சபை அண்மையில் கூடி இது சம்பந்தமான தீர்மானத்தை எடுத்தது.

1 - 1 - 88 தொடக்கம் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு, அவர் தற்போது பெறும் திரட்டிய ஓய்வூதியத்தில் கணக்கிடப்பட்டது.

திரட்டியஓய்வூதியப் பணம் எடுத்து 10 வருடங்கள் பூர்த்தியாகாதவர்களைப் பொறுத்தவரை இக்கணிப்பு அவர்களுக்குப் பாதகமாக உள்ளது.

ஏனெனில் மேலதிக கொடுப்பனவு அவர்களின் குறைந்த ஓய்வூதியத்திலேயே கணிக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் அவர்களுடைய ஓய்வூதியம் — கழிவில் இல்லாத ஓய்வூதியமாக — இருக்க வேண்டும்.

இக்கழிவு ஓய்வூதியம் பெறுவோருக்கு கழிவு இல்லாத ஓய்வூதியத்தில் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

— கூட்டத்தில் இப்படி மேலும் தீர்மானிக்கப்பட்டது. (ε)


SCIENCE CENTRE
KARAVEDDY
A/L 90
O/L 88
(JULY பரீட்சை எடுத்த மாணவர்களுக்காக)
ஆரம்பம்: 23-07-1938 பி. ப. 3மணி
(5326)



## சாரதி தேவை

கார், வான் செலுத்தக்கூடிய சாரதி உடனடியாகத் தேவை. திறமை, அனுபவம், தேகாரோக்கியம் அவசியம். வாகனங்களைப் பராமரிப்பதிலும், மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுபவமும் மேலதிக தகுதிகளாகக் கணிக்கப்படும். யாழ். நகரில் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

சான்றிதழ்கள், நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு [20-07-88]



திருமதி சரஸ்வதி கணேசன்

தோற்றம்: 19 - 06 - 1918
மறைவு: 20 - 06 - 1988

எங்கள் அன்புத் தாயே! எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! தாயே எங்களை எல்லாம் அன்போடும் ஆசையோடும் பேணி வளர்த்த தெய்வமே! வையகத்தில் நற்பிரஜைகளாய் வாழ நல்வாழ்வுக்கு வழி காட்டிய எம் தெய்வமே! கணவரையும் பிள்ளைகளையும், மருமக்களையும் உறவினர்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட தியாகதீபமே! உங்கள் ஆத்மா என்றென்றும் தோன்றாத் துணையாய் நிற்கும். என்றும் உங்கள் நினைவு எம் உள்ளத்தை விட்டு அகலாது

என்றும் உங்கள் பிரிவால் வாடும்,
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை, உற்றார், உறவினர்கள்.

'சரஸ்வதி வாசம்',
சுதுமலை மேற்கு, மானிப்பாய். (5063)

## நினைவஞ்சலி



திருமதி
சிவபாக்கியம் ஏரம்பமூர்த்தி

உங்களது 24 வருட அதிபர் சேவையில் ஆரம்பித்த சிவ தொண்டு இன்றும் தொடருதம்மா!

கணவனும், பிள்ளைகளும்

சிவானந்தபவனம்,
நீர்வேலி. (5318)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

**பொருள்:**
சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக்களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22703
19-07-1988 த. பெ. இல. 23


## அடிப்படை உரிமை மறுப்பு இப்படியுமா நடக்க வேண்டும்?

கிளிநொச்சியில் உள்ள பல கிராமங்களுக்குத் தபால் விநியோகம் தடைப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம்—கண்டி வீதியில் கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்கும் இடையில் புதிதாக அமைந்துள்ள பல கிராமங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரதிபுரம் முதல் இரத்தினபுரம் வரையான ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியிடத் தொடர்பு எதையும் வைத்துக் கொள்ள முடியாத அவலம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கிராமங்கள் அமைந்துள்ள காணிகள் பதிவு பெற்று அங்கீகரிக்கப்பட்ட பின்னரும் இந்தக் கஷ்டம் தொடர்வதாகவும் புகார் செய்யப்படுகிறது.

முன்னர், சம்பந்தப்பட்ட கிராமங்கள் காணிப்பதிவு இல்லாமல் உத்தியோக ரீதியில் அங்கீகாரம் பெறுததால் கடிதம் விநியோகிக்க முடியாது என்று காரணம் கூறப்பட்டு வந்ததாம்.

அதனால் ஏழு கிராமங்களிலும் கடந்த சுமார் ஏழு வருடங்களாக வாழ்ந்து வரும் மக்கள் முறிகண்டியில் உள்ள கடைகளின் விலாசங்களுக்கு மேற்பார்த்தே வெளிஇடங்களில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாகக் கடைகளுக்கும், அவற்றை மேற்பார்த்து விலாசமிடப்படும் கிராம மக்களுக்கும் உரிய கடிதங்கள் விநியோகிக்கப்படுவதில்லை என முறையிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட ஏழு கிராமங்களும் அமைந்துள்ள காணிகள், இப்போது உரிய முறையில் காணி அலுவலசப் பதிவு பெற்று அங்கீரிக்சப்பட்டு விட்டன. ஆகையால் அந்தப் பகுதிகளுக்குத் தபாற் சேவகர் மூலம் நேரடியாகத் தபால் விநியோகம் செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளும், தபால் அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகிப் போனதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சட்டங்கள், விதிமுறைகள் என்பன மக்கள் நன்மைக்காக உருவாக்கப்படுபவையே. ஏழு வருடங்களாக ஓரிடத்தில் வாழும் மக்களுக்கு நேரடியாகத் தபால் விநியோசம் செய்யக்கூடாது என்று விதிமுறைகள் தடுத்தால், நிச்சயமாக அந்த விதிமுறைகள் அநியாயமானவை. வருடக் கணக்கில் மக்கள் வாழும் கிராமம், காணிப்பதிவு அலுவலகத்தில் பதியப்படவில்லை என்பதற்காக அங்கு வாழும் மக்கள் வெளியிடங்களுடன் கடிதத் தொடர்பு வைக்க முடியாது என்று ஒரு விதிமுறை இருந்தால் அதுவும் நிச்சயமாக அநியாயமானது.

மக்களுக்கு உதவ வேண்டும் என்பதில் அக்கறை உள்ள அதிகாரிகளாக இருந்தால், இந்தச் "சிவப்பு நாடா" மக்கள்விரோதமானது என்பதை மேலிடத்துக்குச் சுட்டிக் காட்டி, சம்பந்தப்பட்ட ஏழு கிராமங்களுக்கும், தபாலகத்தில் இருந்தே நேரடியாகத் தபால் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். ஒரு வருடம் அல்ல இரண்டு வருடங்கள் அல்ல ஏழு வருடங்களுக்கு மேலாக ஓரிடத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தபாற் சேவை வசதி செய்யப்படாதது அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்ததற்குச் சமமானது அல்லவா?

தபாற் சேவை ஓர் அத்தியாவசிய சேவை என்று கணிக்கப்பட்டிருப்பதன் அர்த்தம் என்ன? ஏழு வருடஙகளாக குறிப்பிட்ட சில மக்கள் தபால் விநியோக வசதி பெறக்கூடாது என்பது சரி என்று நியாயப்படுத்தப்பட்டால், தபாற் சேவை அத்தியாவசிய சேவை என்று கூறுவதன் நோக்கம் அடித்துச் செல்லப்படுகிறதே!

எங்கள் தமிழ்ப்பகுதி அதிகாரிகளில் ஒரு சிலர், அரச செலவினங்கள் சிலவற்றைக் குறைத்து அரசாங்கத்துக்கு மிச்சம் பிடித்துக் காட்டி, மேலிடத்தில் நல்ல பிள்ளைப் பெயர் வாங்க முற்படுவதாக எங்கள் காதில் செய்தி விழுவதுண்டு!

அந்த வகையில், குறிப்பிட்ட ஏழு கிராமங்களுக்கும் ஒரு தபாற் சேவகரை நியமித்து, ஏன் அரச பணத்தை வீணகச் செலவு செய்ய வேண்டும் என்பதும் இந்த அடிப்படை உரிமை மீறலுக்குக் காரணமாக இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது!!

காரணம் எதுவோ, இனியும் தாமதியாது மேற்கூறப்பட்ட ஏழு கிராம மக்களுக்கும் நேரடித் தபால் விநியோகத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம்.

---

கறுப்பு இனத்தலைவர்

# மண்டேலாவுக்கு ஆதரவு தெரிவித்து லண்டனில் வரலாறு காணாத பேரணி!

## அவரின் 70ஆவது பிறந்தநாளையொட்டி

லண்டன், ஜூலை 19

நிறவேற்றுமைக்கு எதிராகப் பிரிட்டன் இதுகாலவரை சண்டிராத ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று லண்டனில் நடத்தப்பட்டது.

லண்டன் மாநகரின் ஒரு பகுதி இதனால் செயலிழந்ததுஎன்று பி பி சி. அறிவித்தது.

சிறை வைக்கப்பட்டிருக்கும் தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவின் 70 ஆவது பிறந்த நாள் நேற்றுத் திங்கள் கொண்டாடப்பட்டது. அதை ஒட்டியே நேற்று இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றது. பின்னர் ஹைட்பார்க் சதுக்கத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது.

தென் ஆபிரிக்கப் பிஷப்பும் நோபல் சமாதானப் பரிசுபெற்றவருமான வணடெஸ்மண்ட் டுட்டு பேரணியில் பேசினார்,

நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்யாமல் தென் ஆபிரிக்காவில் நிறவேற்றுமைக்கு முடிவு கட்டமுடியாது.

தென் ஆபிரிக்காவில் கறுப்பு இன மக்களும், வெள்ளை இன மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும் அந்த நிலைக்கு உலக நாடுகள் பேச்சளவில் ஆதரவு கொடுப்பதை நிறுத்தி, செயலளவில் ஆதரவு கொடுக்க வேண்டும்.

இப்படி பிஷப் டெஸ்மண்ட்டுட்டுசொன்னார்.

இதனிடையில் கிளாஸ்கோவில் இருந்து ஐந்து வாரங்களுக்கு முன் ஆரம்பமான 500பேரின் பாதயாத்திரை நேற்று லண்டனை வந்தடைந்தது.

நெல்சன் மண்டேலாவை விடுதலைசெய்யக் கோரி இந்தப் பாதயாத்திரை நடத்தப்பட்டது.

சதிமுயற்சி, தேசத்துரோகக்குற்றச்சாட்டுக்கள் மீது 1964 ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அன்றுதொடக்கம் அவர் தென் ஆபிரிக்காவில் சிறைவைக்கப்பட்டுள்ளார்

இதேவேளை

சிறை வைக்கப்பட்டிருக்கும் தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவின் 70 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சிகளுக்கு தென் ஆபிரிக்க அரசு விதித்த தடையை கேப்டவுன் உயர் நீதிமன்றம் ரத்துச் செய்து விட்டது.

அதைத் தொடர்ந்து கறுப்பு இன மக்கள் பிறந்த நாள் கொண்டாட்டங்களை நடத்த ஏற்பாடு செய்தனர்.

பிறந்தநாள் கலைவிழா ஒன்றுக்குச் சென்ற பொலீஸார் அங்கிருந்த மக்களை வெளியேற்றினர். மண்டேலாவை வாழ்த்தியபடி அவர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறினர். தேசிய ஆபிரிக்க காங்கிரஸுக்கு நிறங்களிலான பலூன்களைப் பறக்க விட்டனர்.

மண்டேலாசிறைவைக்கப்பட்டுள்ள போர்ட்ஸ் மவுத் சிறையைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

நெல்சன் மண்டேலாவைச் சென்று பார்க்க அவரின் மனைவி வின்னி மண்டேலா மற்றும் அவரின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட அனுமதியை வின்னி மண்டேலா நிராகரித்து விட்டார்.

## எல்சல்வடோர் நெருக்கடி!

எல்சல்வடோர், ஜூலை 18

எல்சல்வடோரின் முக்கிய போக்குவரத்துச் சாலைகளைப் பிரதான கொரில்லாக்கள் அடைத்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

முற்றுகையை உடைக்கும் இராணுவ நடவடிக்கையை எல்சல்வடோர் இராணுவம் எடுத்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

எல்சல்வடோர் ஜனாதிபதி புற்று நோய்க்காக அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# 'காலிஸ்தான்' நாடு ஒரு நாளில் வராது!

சண்டிகார், ஜூலை 18

காலிஸ்தான் நாட்டை உருவாக்குவது ஒருநாள் வேலையல்ல!

இப்படி எழுதப்பட்ட தஸ்தாவேஜு ஒன்றை மோதலில் உயிரிழந்த சீக்கிய தீவிரவாத கொமாண்டோத் தலைவர் சுக்தேவ் சிங்கின் சடலத்தில் இருந்து பொலீஸார் கண்டு எடுத்தனர் என்று அறிவிக்சப்பட்டது.

அக்கடிதத்தில் மேலும் எழுதப்பட்டிருந்ததாவது:

சீக்கிய மக்களைத் தாக்கக் கூடாது. அப்படிச் செய்வது எம்மை அவர்களிடம் இருந்து பிரித்து விடும்.

அரசியல் தலைவர்கள், பொலீஸார், அவர்களுக்குத் தகவல் கொடுப்பவர்கள், காலிஸ்தானை வன்மையாக எதிர்ப்பவர்கள் ஆகியோரை இலக்காக வைத்தே நாம் செயல்பட வேண்டும்.

'காலிஸ்தான்' கோரிக்கை விளையாட்டு அல்ல —

இப்படிஅந்தத்தஸ்நாவேஜில் எழுதப்பட்டிருந்தது. (எ)

## நீர்மூழ்கியை தாக்க நவீன விமானம்!

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீனப்போர் ஆயுதங்களைக் கொடுத்துவருகிறது.

இப்போது கடலில் வரும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணிக்கக் கூடியவை நவீன ரக விமானங்களைக் கொடுக்க முடிவு செய்து உள்ளது.

# திருநாவுக்கரசு நிபந்தனைகளை ஜெயலலிதா நிராகரித்தார்!

சென்னை, ஜூலை 18

கருத்து வேற்றுமையைத் தீர்க்க முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு விதித்த நிபந்தனைகளை ஜெயலலிதா புறக்கணித்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகளில் ஒன்று ஜெயலலிதாவைப் பாதுகாக்கும் 'கறுப்புப்பூனைப் படை' விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்பது.

நிபந்தனைகள் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்து அ.தி.மு.க. 'ஜெ' அணியில் விரிசல் மேலும் அதிகரித்துள்ளதாக் கூறப்படுகிறது.

நெடுஞ்செழியன், பண்ருட்டி இராமச்சந்திரன், திருநாவுக்கரசு ஆகியோர் நாவலர் வீட்டில் கூடி புதிய நிலைமை பற்றி ஆராய்ந்தனர்.

அப்போது ஜெயலலிதாவை வீழ்த்துவது எப்படி? ஜெயலலிதாவைக் கைப்பாவையாக வைத்துள்ள அரச அதிகாரியை மடக்குவது எப்படி தங்களது எதிர்கால திட்டம் என்ன?''— என்பது பற்றி விவாதித்தார்கள் தமிழகஅரசியல் வட்டாரங்களின்படி—

ஜெயலலிதா தனது முடிவில் இருந்து மாறுவதாக இல்லை என்று தெரிகிறது.

பண்ருட்டி இராமச்சந்திரன், திருநாவுக்கரசு ஆகியோரை கட்சியை விட்டு நீக்க வேண்டும். இப்படியே விட்டு கொண்டு போனால் மற்றவர்களும் கட்டுப்பாடு இல்லாமல் செயல்படுவார்கள், ஆகவே இவர்களைக் கட்சியில் வைத்துக் கொண்டே ஒருவரை ஒருவர் விமர்சிப்பது நல்லதல்ல'' — இப்படி ஜெயலலிதாவுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது

ஜெயலலிதா இறுதி முடிவை அறிவிப்பது பற்றி தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ)

# சோவியத் யூனியனிலும் அகதிகள் பிரச்சினை!

மாஸ்கோ, ஜூலை 18

சோவியத்யூனியனில் இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள இனமோதல் காரணமாக அகதிகள் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆர்மெனியா மாநிலத்தில் இருந்து சுமார் 20 ஆயிரம் அஸர்பைஜான் பிரசைகள் சொந்த மாநிலத்துக்கு திரும்பி விட்டனர் என்றும்.

அதுபோன்று சுமார் 7 ஆயிரம் ஆர்மெனியர்களும் திரும்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் மாஸ்கோ அரசு டெலிவிஷனில் ஒளிபரப்பிய ஒரு நிகழ்ச்சி ஆர்மெனியர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக பெரும் எண்ணிக்கையில் ஆர்மெனியாவின் விமான நிலையத்தை முற்றுகையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

---

பென்ஷன் திணைக்களம்

# மாதாமாதம் லட்சக்கணக்கான பணம் மோசடி மூலம் இழப்பு

கொழும்பு, ஜூலை 19

பென்ஷன் திணைக்களம் மாதாமாதம் இலட்சக்கணக்கான ரூபா பணத்தை மோசடிச் செயல்கள் காரணமாக இழந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

எதுவித வழியாலும் இதனைத் தடுக்க முடியாதிருப்பதாக திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விதவை, அனாதை நிதித்திட்டத்தின் கீழ் நன்மை பெறுபவர்கள் பெற்றுக்கொள்ளாத பென்ஷன் பணம் நிலுவையாக பல மாதங்களாகத் திணைக்களத்தில் இருந்தது.

இப்பணத்தைத் திணைக்களத்தில் மோசடி செய்து சில ஊழியர்கள் பெற்றுவிடுகின்றனர் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-எ)

## ஸ்ரீலங்கா படையினர் துன்புறுத்தல்

குருநகர், ஜூலை 19

தாளையடி, செம்பியன் பற்று, உடுத்துறை பகுதிக் கடற் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கடல்தொழிலாளர்களை இம்சைப் படுத்துகின்றனர் என்றும் அவர்களின் இயந்திரப்படகுகளை கடலில் மூழ்கடிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## கோமாரி தடுப்பு

வடமராட்சி, ஜூலை 19

வடமராட்சியில் கோமாரி தடுப்பு ஊசி மருந்து போடப்படுகிறது. (இ-16)

## ஆகஸ்ட் இறுதியிலேயே நாடு திரும்புவார்

கொழும்பு ஜூலை 19

கடந்த சனிக்கிழமை வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு புறப்பட்ட பிரதமர் திரு. பிரேமதாஸ அடுத்த மாதக் கடைசியில் தான் நாடு திரும்புவார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு பிரதமர் விஜயம் செய்கிறார். [இ-எ]

## நிதி ஒதுக்கியும் கட்டடம் கட்டப்படவில்லை

ஒட்டுசுட்டான், ஜூலை19

ஒட்டுசுட்டான் தபால் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் கட்டடம் கட்டப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-113)

## வன்செயலால் இறந்தோரின் ஆத்ம சாந்தி வேண்டி மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம்

நெடுந்தீவு, ஜூலை 19

நாட்டின் அமைதியை வேண்டியும் சமீபத்தில் வன்செயல் காரணமாக இறந்தவர்களின் ஆத்ம சாந்தியும் வேண்டி எதிர்வரும் ஆடி அமாவாசைத் தினமான ஆகஸ்ட் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் அருள்மிகு ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம் நடைபெறும்.

இனமேத பேதமின்றி விரும்பிய எவரும் மரணமடைந்த ஒருவருக்கு சிரார்த்த மோட்ச சங்காபிஷேகம் செய்ய முடியும்.

ஒருவருக்கு ரூபா பதினைந்து வீதம், எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக கட்டுப்பணம் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுப்பணம் செலுத்தியவர்கள் 12-8-88 ஆம் திகதி ஆலயத்தில் தமது பற்றுச் சீட்டுக்களைக் காண்பித்து மோட்ச சிரார்த்த சங்காபிஷேகத்தில் கலந்து கொள்ளலாம். (இ-111)

---

சமய சந்நிதிகளில்

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை 19

யாழ் வண்ணை கன்னாதிட்டி ஸ்ரீ காளியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10-30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 27 ஆந்திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமைதீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவத்துடன் விழாக்கள் நிறைவுபெறும்.

## மாவைக்கந்தன்ஆலயம் அமைதிப் பிரதேசம்

### இன்று கொடியேற்ற விழா

காங்கேசன்துறை, ஜூலை 19

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கடந்தவருடம் நடைபெறுது தடைப்பட்டிருந்த வருடாந்த மகோற்சவத்தை இம்முறை நடத்தச் சகலஏற்பாடுகளையும் ஆலய ஆதீன கர்த்தா பஹாராஜஸ்ரீ க. து. ஷண்முகநாதககுருக்கள் மேற்கொண்டுள்ளார்.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலய உற்சவம் தொடர்பாக ஆதீன கர்த்தாவிடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ள சில விடயங்கள் வருமாறு:

அடியார்கள் யாவரும் மேற்கு-வடக்கு வீதிவழியாக வலம்வந்து கிழக்கு வாசல் ஊடாக கோவிலுக்குள் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.

கோவில் மேற்குக் கோபுரவாசல் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

திருவிழாக் காலத்தில் எவரும் எதுவித கலை நிகழ்ச்சிகளையும் கோவில் எல்லைக்குள் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது.

ஆலய வட்டாரப் பகுதி உற்சவ காலங்களில் 'அமைதிப் பிரதேசம்' எனப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதால் ஒலிபெருக்கி உபயோகிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் தெல்லிப்பளை பாதுகாப்புச் சபையினர் தொண்டர் சேவைகளை மேற்கொள்ள விருக்கின்றனர்.

ஆலயச் சுற்றுடலில் போக்குவரத்து, சுகாதார ஏற்பாடுகளை வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினர் மேற்கொள்வார்கள். (சி-68)

# கடற் காவலர் படை கலைக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 19

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு உருவாக்கிய கடற்காவலர் படை கலைக்கப்பட்டுள்ளது.

இப்படையினர் திருமலைக் கடலில் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

சிலாபம் மாவட்டத்தில் கண்டக்குளிய முகாமில் கடற்காவலர்படையினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அங்கு ஊர்காவல் படையில் சேர்பவர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏற்கனவே கடற்காவலர் படையில் பணிபுரிந்தவர்களை இலங்கைக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. (இ-எ)

## பொத்துவிலில் 4 ஜவான்கள் பலி!

கொழும்பு, ஜூலை 19

பொத்துவிலில் நேற்று முன்தினம் நிலக்கண்ணி ஒன்று வெடித்ததில் இந்தியஅமைதிப்படையைச் சேர்ந்த நான்கு ஜவான்கள் உயிரிழந்தனர். [இ-எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
B.A. 1988 டிசம்பர்
பொருளியல் S. வரதராஜன்
பிரிவு: I சனி 8.00 a.m. வியாழன் 10.00 a.m.
பிரிவு: II சனி 3 00 p.m. வியாழன் 10.00 a.m.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

19 - 07 - 1988 செவ்வாய்க்கிழமை



வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
G.A.Q. 1989 ஏப்பிரல்
பொருளியல் S. வரதராஜன்
சனி, ஞாயிறு 1-00 — 3-00 p.m
BECON
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


யாழ் போதனா வைத்தியசாலை

## சத்திரசிகிச்சை நிபுணரின் இடமாற்றத்தை ரத்துச் செய்க!

### அமைச்சுக்கு மாணவர் தந்தி

யாழ்ப்பாணம் ஜூலை 19

யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வகுமார் மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை உடனடியாக ரத்துச் செய்க.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், சுகாதார அமைச்சுக்கு அனுப்பிய தந்தி ஒன்றிலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். கணேசரத்தினம் மரணமானார். இந்த வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை. இந்த நிலைமையில் இப்புதிய இடமாற்ற உத்தரவு யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் பற்றாக் குறையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

மேலும் மருத்துவபீட விரிவுரைகள் காலவரையறையின்றிபின்போடப் பட்டுள்ள இவ்வேளையில், விரிவுரைகளை மீண்டும் ஆரம்பிக்க எடுக்கும் நடவடிக்கைகளை இந்த இடமாற்றம் மேலும் பின்னடையச் செய்யலாம் என்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஒ - 5)

## சிமெந்து விலையில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம் ஜூலை 19

சிமெந்து விலையில் எந்த மாற்றமும் இல்லை அது பழைய விலையில் தான் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும்.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

சிமெந்தின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக வெளியான வதந்திகளை அடுத்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் வினவியபோது இப்படி தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிமெந்துக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-க)

## ராஜாவின் மண்டையோடு கொழும்புக்கு

கொழும்பு ஜூலை 19

சண்டி தலதா மாளிகையின் பட்டத்து யானையான 'ராஜா'வின் மண்டை ஓடும் தோலும் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன.

ஏனைய உடல் உறுப்புக்கள் தியவதன நிலமையின் உத்தியோக வாசஸ்தல வளவினுள் புதைக்கப்பட்டன.

கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட மண்டை ஓடு, தோல்களை நிரப்பி, 'ராஜா' பட்டத்து யானையைப் பேணும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

83 வயதான ராஜா' பட்டத்து யானையை அரசு நாட்டின் 'அருஞ் செல்வ'மாக பிரகடனப் படுத்தியது குறிப்பிடத் தக்கது. (ஒ - எ)

## மீனவர் படும்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சி மீனவர்களுக்கு இந்திய அமைதிப்படையினரால் வழங்கப்பட்டு வந்த மீன் பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களைப் படையினர் மீளப் பெற்று வருகின்றனர். (ஒ-10)

## வேலையற்றோருக்கு தொழிற்பயிற்சிகள்

### திருநெல்வேலியில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வேலையற்றோருக்கு சுய தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் பல தொழில் முறைகளிலும் பயிற்சிகளை அளிக்க உள்ளது.

பெண்களுக்கான 10 வாரகால பயிற்சிகள் நடைபெற உள்ளன.

இதில் விவசாயம், பழப் பயிர்ச்செய்கை, கோழி வளர்ப்பும், மிருகபரிபாலனமும், மனையியல், தையல், கைப்பணி ஆகிய துறைகளில் இந்த பயிற்சிகள் நடைபெறும்.

படித்த இளைஞர்களுக்கான விவசாய, கைதெளி கருவி பாவித்தலும், பராமரித்தலும் ஆகியவற்றிற்கான பயிற்சி நெறியும் நடைபெறும்.

இவை இரண்டும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

நீர் இறைக்கும் இயந்திரம் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றைப் பாவித்தல் சம்பந்தமான பயிற்சி நெறியும் நடத்தப்படும்

பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்புவோர் நாளை புதன்கிழமைவரை—

விவசாய உதவிப் பணிப்பாளர் விரிவாக்கம், விவசாய உத்தியோகத்தர் பயிற்சி, மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், திருநெல்வேலி என்ற முகவரியுடன் நேரில் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-க)

### அறிவுறுத்தல் கூட்டம்

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், இணைப்பு உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

நாளை புதன்கிழமை 20ஆம் திகதி காலை 10 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறும்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் இந்தக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். (ஒ-9)

## மோதலில் காசீம் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை19

கடந்த சனிக்கிழமை சுழிபுரத்தில் நடந்த மோதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த காசிம் மரணமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காசிம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவர் எனக் கூறப்பட்டது. (ஒ)

## இலவச உணவுப்பொருள்: நாளை கடைசி நாள்

யாழ்ப்பாணம் ஜூலை 19

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட பகுதிகளுக்கான மூன்றாவது சுற்று இலவச உணவுப்பொருள்களை நாளை புதன் வரை மட்டுமே பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் இந்தப் பொருள்கள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### வடகொரியா----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞ மன்றம் இது சம்பந்தமாக விடுத்த அழைப்பை வடகொரியா ஏற்றுக் கொண்டது.

சோல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 17-ஆம் திகதி ஆரம்பமாகின்றன. (ஒ-எ)

### 25 இல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

''தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, மற்றும் முன்னணி உறுப்பினர்களான ஜெகன், சிவபாதம், நடேசுதாசன், குமார் உட்பட 53பேர் கொடூரமாக கொலை செய்யப் பட்டார்கள்.

இவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக எதிர்வரும் 26, 27, 28 ஆகிய மூன்று தினங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு கொண்டாட்டங்களைத் தவிர்த்து துக்கம் அனுஷ்டியுங்கள்'' இவ்வாறு ரெலோ இயக்கம் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-164)

## நிவாரணம்-----

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

இந்த மாநாட்டில் புதிதாக விதிக்கப்படவேண்டிய கட்டுப்பாடுகள் குறித்து தீர்மானிக்கப் பட்டன.

இந்தத் தீர்மானங்கள் பற்றிய விவரங்கள் CG/WC/GEN/88/3 இலக்க கடிதம் மூலம் அந்தப் பகுதி அரசாங்க அதிபர்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது.

விதிக்கப்படவிருக்கும் புதிய கட்டுப்பாடுகள் வருமாறு:-

★ அரச ஊழியர் ஒருவரை அங்கத்தவராகக் கொண்ட குடும்பங்களுக்கு நிவாரண உணவுப் பொருள் வழங்கப் படமாட்டாது:

★ மாதாந்தம் நிலையான வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் நிவாரண உணவுப் பொருள் கிடையாது எனினும் சமயாசமய ஊழியர்களுக்கு— அவர்களுடைய சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கு போதாதவிடத்து அவர்களுக்கு மட்டும் இலவச உணவு வழங்கப்படும்.

★ இடம் பெயர்ந்து உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் தங்கியிருப்போரில் — நிவாரணம் பெறாமல் சீவிக்க முடியாது எனக் கருதப்படுவோருக்கு—மட்டுமே நிவாரண உணவுப் பொருள் வழங்கப்படும்.

★ வரட்சி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு அகதி நிவாரண உணவுப் பொருள் வழங்கப்படமாட்டாது.

★ சில தினங்கள் இடம் பெயர்ந்து வேறிடத்தில் தங்கிவிட்டு பின்னர் மீண்டும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பியோருக்கும் இந்நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்படமாட்டாது. (உ-126)

### சுழிபுரம்...

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

ஞல் இரண்டு அமைதிப் படையினர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர். பொது மக்களில் ஒருவரும் காயமுற்றார்.

இந்திய அமைதிப் படையினர் தற்பாது காப்பிற்காக திருப்பிச் சுட்டதில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார். (உ)


## வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு

தேவர்கள் அமிர்தம் கடைந்தபோது பாற்கடலில் வெளிவந்த அமிர்தம், மகாலக்ஷ்மி, அஷ்டவசுக்கள் இவற்றுடன் வெளிவந்த சங்கு பூசைக்கு மிக வேண்டிய சாதனமாகும். வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சர்வ சௌபாக்கியங்களும் பெருகி சுபீட்சம் தாண்டவமாடும். பல ரகங்களில் சக்திக்கேற்றபடி வாங்கிக் கொள்ளலாம். கோவில் தேவைகளுக்குரிய பெரிய அளவிலும் உண்டு.

**கோவில் தேவைக்கு விலைக்கழிவு உண்டு.**

உடன் தொடர்பு கொள்ளவும்: **விலை: ரூபா 1000/-இல் இருந்து**

தொடர்பு: **திரு. T. உருத்திரகோடீஸ்வரக் குருக்கள்**

பிள்ளையார் கோவில் வடக்கு வீதி, சொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை. (5332)


## புலோலி பசுபதீஸ்வரர் ஆலய

# இராச கோபுர நிதி

17-6-88 தொடக்கம் அருள்மிகு புலோலி பசுபதீஸ்வர ஆலய இராஜகோபுர வேலை நடைபெறுகின்றது. அன்னை பராசக்தியின் ஆணைப்படி வேலை நடைபெறுவதால் குறுகியகால எல்லையில் பூர்த்தியடைவதற்கு சிவபக்தர்கள் முன்வந்து பணஉதவி வழங்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| | முன் தொடர்ச்சி | 64,251-75 |
| 1. | வலிதா சிறீ வன், மந்திகை | 5,000-00 |
| 2. | இ. சன், (Electricals) பருத்தித்துறை | 5,000-00 |
| 3. | மு. நடராசா பருத்தித்துறை | 1125-00 |
| 4. | ச. நவரத்தினராசா, பத்திரகாளி அம்மன் கோவிலடி | 1008-00 |
| 5. | நா. விஜயரட்ணம், 2-ம் குறுக்குத் தெரு | 1000-00 |
| 6. | ந. கோணேசன், ஆத்தியடி | 1000-00 |
| 7. | திருமதி பாலா செந்தில்நாதன், மருதடி | 1000-00 |
| 8. | ச. மனோகரன், கந்த உடையார் ஒழுங்கை | 1000-00 |
| 9. | ம. சபாபதி குருக்கள், தம்பசிட்டி | 1000-00 |
| 10. | பொ. அருட்சோதிநாதன் | 1000-00 |
| 11. | சிவகுரு சந்திரசேகரம், மருதடி | 1000-00 |
| 12. | செல்வி தேவகி சந்திரசேகரம்பிள்ளை, ஆத்தியடி | 1000-00 |
| 13. | ச. இந்திரலேகா, புலோலி கிழக்கு | 500-00 |
| 14. | தி. கணேசராசா, புட்டளை | 500-00 |
| 15. | R தங்கேஸ்வரன், புலோலி மேற்கு | 500-00 |
| 16. | திரு. சபாநாயகம், நெல்லியடி | 500-00 |
| 17. | செல்வி கே. கமலினி, தும்பளை | 500-00 |
| 18. | கே. பி. நிமல், 2-ம் குறுக்கு தெரு | 500-00 |
| 19. | திருமதி செல்லையா, தும்பளை | 300-00 |
| 20. | கலாநிதி R. விக்னேஸ்வரன், மருதடி | 100-00 |
| 21. | திருமதி மகேஸ்வரி வாசன் புலோலி கிழக்கு | 100-00 |
| 22. | ச. சதாசிவம், கணேச பேக்கரி உடுப்பிட்டி | 100-00 |
| 23. | R பெரியதம்பி, வரணி | 100-00 |
| 24. | சில்லறை வரவு | 138-00 |
| 25. | சு. மண்டலநாதன், கொழும்பு | 500-00 |
| | | 88,722-75 |

காசோலை அனுப்புபவர்கள் இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையிலுள்ள 15917 என்ற கணக்கிலக்கத்தில் வைப்பு செய்யவும்

பொ. பாலசிங்கம்
அதிபர், ஹாட்லி கல்லூரி.
தனாதிகாரி.

(C 5805)

## அறிவித்தல்

**லங்கா சித்த ஆயுள் வேத வைத்தியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

இறுதி ஆண்டு D. A. M பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் (85, 86, 87 ஆம் ஆண்டு) சகல மாணவ மாணவிகளையும் 19ஆம் 20ஆம் திகதிகளில் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

— மாணவ மன்றம்
(5101)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

பின்வரும் பகுதிகளுக்கு பயிலுனர்களாக சேர்வதற்கு ஆர்வம் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

16 — 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் க. பொ. த. சாதாரண தரம் சித்தி அடைந்தவர்களாகவும் இருப்பின் ஜூலை 18, 19, 20 ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நேரில் சமுகம் தரவும்.

★ COLOUR PRINTING UNIT
★ COST UNIT
★ RESTAURANT & KITCHEN UNIT
★ APARTMENT UNIT

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
**ஹோட்டல் ஞானம்ஸ்**
299, 301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/5883)


## மரண அறிவித்தல்கள்

### திரு. த. வல்லிபுரம்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த திரு. த. வல்லிபுரம் (முகாமையாளர் இலங்கை வங்கி பருத்தித்துறை) 17-07-88 அன்று காலமானார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும் திருமதி சுசீலாதேவி, வீரமரணமடைந்த வசந்தன் (கரும்புலி கப்டன் மில்லர்) [illegible] ஆகியோரின் அன்புத் தந்தையும் [illegible] அன்பு மாமனாரும் [illegible] அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 19-7-88 செவ்வாய்க்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வேரேன்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்;
திருமதி கமலாதேவி வல்லிபுரம்
துன்னாலை தெற்கு,
கரவெட்டி

(5098)

### திருமதி C. S. பொன்னுத்துரை

திருமதி Violet ஜெயபாக்கியம் பொன்னுத்துரை (Nee ஆசீர்வாதம்) 6-7-88 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலம் சென்ற C. S. பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் Shanthi (U. K.) Dr. சர்வநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் Charlie சோமசுந்தரம் (U.K) Lei (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி E. R. குணநாயகம் செல்வி G. R. செல்லப்பா, காலம் சென்ற C. J. ஞானரத்தினம் காலம் சென்ற C. E. குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 9-7-88 அன்று கொழும்பில் நடைபெற்றது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
செல்வி G. R. செல்லப்பா
பிரதான வீதி,
(5339) தெல்லிப்பழை

### தனபாலன் (பாபுஜி சார்ளி)

பாபுஜி, சார்ளி என்று அழைக்கப்படும் தனபாலன் அகால மரணமடைந்து விட்டார். இவர் சுப்பிரமணியம் (உதவி நில அளவை அத்தியட்சகர் அநுராதபுரம்), பாக்கியலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், சந்திரகாந்தன் (வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன்), சிறிகாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), ஆகியோரின் சகோதரனும், திருஞானசம்பந்தர் இராசம்மா ஆகியோரின் பேரனும், அரியநாயகம் (பரிபாலன உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை), பாலசுப்பிரமணியம்(ஜெய கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்), நடராசா (ஜேர்மனி) தியாகராசா ஆகியோரின் மருமகனும், கனகரத்தினம், பரமேஸ்வரி, மகேந்திரன், நகுலேஸ்வரி ஆகியோரின் பெருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக செவ்வாய்க்கிழமை இன்று (19-7-88) பி. ப. 3.00 மணிக்கு கில்னர் ஒழுங்கை 424/1/1 இல்லத்திலிருந்து கோம்பைமணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: செ. சுப்பிரமணியம்.
(5103) (தகப்பன்)

### செல்லையா அரியநாயகம்

தொண்டமனாற்றைச் சேர்ந்த செல்லையா அரியநாயகம் என்பவர் 17-7-88 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காலமானார். இவர் காலம் சென்ற செல்லையா சொர்ணம்மா அவர்களின் புத்திரனும், கோகிலாம்பாளின் அன்புக்கணவரும் முரளிதரனின் அன்புத் தந்தையும், இராசதுரை, விஜயரத்தினம், சிவாலிங்கம், மதியாபரணம், அம்பாலிகை அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 17-7-88 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணிக்கு தொண்டமனாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அ. முரளிதரன்.
நடுத்தெரு,
தொண்டமனாறு. (5337)

### திருமதி சிவலை இராசம்மா

இல. 188 கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்த காலஞ்சென்ற தம்பையா சிவலையின் மனைவி இராசம்மா காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரி, காலஞ்சென்ற தபால் அதிபர் குணரட்ணம், பொலிஸ் சாஜன் பூவரட்ணம் காலஞ்சென்ற மகேஸ்வரி, யோகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (டுபாய்), புவனேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்புத்தாயார் ஆவார். அவரது பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு 19-07-88 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (5095)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில். உள்ள அவர்களது அச்சகத்தில் 19 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Tuesday 19th July 1988.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org